## 8.தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

தரமான பாடநூல்களை அச்சிட்டு, வாங்கத்தக்க விலையில், குறித்த க ாலத்தில் மாணவ மாணவியருக்கு வழங்குவதே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் நோக்கமாகும். மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 1 முதல் 12 ஆம் வ குப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாடநூல்கள் கிடைப்பதை உறுதிசெய்வதும், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்ப டுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் பிரிவினருக்கு இலவசப் பாடநூல்கள் வழங் குவதும் செயல் நோக்கமாகும்.

### 8.1. பாடப்புத்தகங்கள்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 502 தலைப்புகளில் 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு 529 நூல்கள் (தொகுதி I, தொகுதி II உட்பட) அச்சி டுவதுடன் தொழிற்பயிற்சிக்கான சில நூல்கள் மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்புக்கான நூல்களையும் கீழ்க்குறிப்பிட்டவாறு அச்சிட்டு வருகிறது.

1) மாநிலப் பாடத்திட்டத்தில்1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் ம ாணவர்களுக்கான பாடநூல்கள்.
2) மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான தெ ாழிற்கல்வி பாடநூல்கள்.
3) மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கான 10ஆம் வகுப்புப் பாடநூல்கள்
4) 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் ம ாணவர்களுக்கான சுற்றுச் சூழல் கல்விப் பாடநூல்கள்
5) அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகளில், முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு பருவங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கான பாடநு ால்கள்.
6) சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு வரை மொழி மற்றும் வழிப் பாடநூல்கள், மேல்நிலை முதலாம் ஆண் டு மற்றும் இரண்டாம் ஆண்டு பள்ளி மாணவர்களுக்கு சிறுபான்மை மொழிப் பாடநூல்கள்.
7) ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களுக்கான வளநூல்கள்
8) ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்ப டுத்தப்பட்டோர் நலத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள்.
9) பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக 10 மற்றும் 12ஆம் வகுப்பிற்க ான மாதிரி வினாவங்கி மற்றும் தீர்வு நூல்கள்

### 8.2. இலவசப் பாடநூல்கள்

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மான்யம் பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், சுயநிதிப் பள்ளிகளில் மாநில பாடத் திட்டத்தின்கீழ், தமிழ் வழியில் பயிலும் ம

ாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. மேலும் மெட்ரி குலேசன் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையில் பயிலும் ம ாணவர்களுக்கு, தமிழ்ப் பாடநூல்கள் மட்டும் 2007-08 ஆம் கல்வியாண்டு முதல் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**8.3. வலைத்தளம்**

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் உருது ஆகிய 6 மெ ாழிகளில் 529 பாடநூல்களை வெளியிட்டு வருகிறது. இவற்றில் 348 பாடநு ால்கள் www.textbooksonline.tn.nic.in என்ற வலைத்தள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளன.

**8.4. பிற மாநிலங்களில் பயிலும் தமிழ் மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள்**

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மும்பை மாநகராட்சி, டெல்லி தமிழ்ச் சங்கம், அகமதாபாத் மாநகராட்சி, கொச்சி தமிழ் ஐக்கிய சங்கம் மற்றும் அ ந்தமான் நிக்கோபார் நிர்வாகம் போன்ற பிற மாநிலங்களில் உள்ள தமிழ் ம ாணவர்களின் நலனுக்காக பாடநூல்களை இலவசமாக வழங்கி வருகிறது.

**8.5. குறிப்பேடுகள்.**

தமிழ்நாடு பாடநூல் கழகம் குறிப்பேடுகளைத் தயாரித்து வெளிச்சந்தையில் விற்பனை செய்து வருகிறது.